**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S.93/2023**

**CNR.No.TNCB19000**

| **Deposition** | **:** | **DW.1** |
|---|---|---|
| Name | : | சம்பத்குமார் |
| Father's / Husband's Name | : | ராமகிருஷ்ணன் |
| Village / முகவரி | : | கெண்டேபாளையம் |
| Taluk / தாலுக்கா | : | மேட்டுப்பாளையம் |
| Age / வயது | : | 46 |

The witness sweared under Oaths Act 1969 on this the day of 15th April 2025

**முதல் விசாரணை**

நான் கெண்டேபாளையத்தில் வசிக்கிறேன். நான் இந்த வழக்கின் 4-ம் பிரதிவாதியாவேன். வாதியை தெரியும்.. முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்**

| **வ. எண்.** | **தேதி** | **ஆவண விபரம்** | **ஆவணத்தின் தன்மை** | **ஆவண வரிசை** |
|---|---|---|---|---|
| 1 | 30.05.2001 | காரமடை கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் லேட்.ராமகிருஷ் ணன் பெயரில் | அசல் | பி.வா.சா.ஆ.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கப்பட்ட அறிவிப்பு | | |
| 2. | | மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில் ரூ. 3,74,341/- செலுத்தியதற்கான ரசீது | அசல் | பி.வா.சா.ஆ.2 |

தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

தாத்தா சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து ராஜேந்திரன், தங்கராஜ், சுப்பம்மாள் மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்து 3.60 ஏக்கர் உள்ளது. தாவா சொத்தில் தென்னை விவசாயம் செய்து வருகிறோம். ராமகிருஷ்ணன் 70 தென்னை மரங்களும் 20 செண்ட்டில் ராஜேந்திரன் பூ செடியும் தங்கராஜ் 40 செண்டில் வாழையும் 30 செண்டில் மசால் பில் விவசாயம் செய்து வருகிறார்கள். 2 ம் பிரதிவாதிக்கு ஈரண்ண கவுண்டர் ஒரு உயில் எழுதி வைத்திருக்கிறார் என்றால் இல்லை. தாவா சொத்து தற்போது வரை பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

தாவா சொத்தில் சுப்பம்மாளுக்கும் பாகம் இருக்கிறது என்றும் அதில் விவசாயம் செய்து வருமானம் ஈட்டி வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிக்கு பாகம் கொடுக்க ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை.

2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

(வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.